[2005 ஏப்ரல் 6

5. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை நடைபெறுகையில் வெளியில் அறிவிப்பு செய்தது

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை கூடியிருக்கின்ற நேரத்தில் எந்த அறிவிப்பை வெளியிடுவதாக இருந்தாலும், எந்த அறிக்கையை வெளியிடுவதாக இருந்தாலும் முதலிலே சட்டப் பேரவைக்குத்தான் தெரிவிக்கப்பட வேண்டும். உறுப்பினர்களுக்குத்தான் அந்த உரிமை உண்டு. என்றாலும் வெளியிலே நான் அந்த அறிக்கையை விட்டுவிட்டு வந்திருக்கிறேன் என்று முதலமைச்சர் இங்கே பேசியிருப்பது முறைதானா என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் செய்த அறிவிப்பில் ஒரு திருத்தம் செய்துகொள்ளவும். இதுவரை இறந்தவர்களின் எண்ணிக்கை 10. குடிசைகள் சேதம் 42. அது இங்கே தவறாக கூறப்பட்டது. இறந்தவர்களின் எண்ணிக்கை 10 என்று திருத்திக்கொள்ளவும்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை ஒரு ஒழுங்குப் பிரச்சினையாக எழுப்புகின்றேன். இதுகுறித்து தங்களுடைய தீர்ப்பினை, முடிவினை எதிர்பார்க்கின்றேன். சட்டசபையிலே வெளியிடாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, விதி ஒன்றும் இல்லை. இது ஒரு மரபுதான்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றபோது இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிவாரண உதவி அறிவிப்பதும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து காயம் அடைந்தவர்களுக்கு நிதியுதவி அறிவிப்பதும் ஒரு routine matter. அது தினசரி நடக்கின்ற ஒன்று. எனவே சட்டசபையில்தான் அறிவிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டசபை கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, தினசரி இத்தகைய அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருக்கிறோம். ஆகவே மற்ற Policy decisions–க்கு ஏற்படுகின்ற அந்த சட்ட விதிமுறைகளை இதற்கு நாம் apply செய்ய முடியாது. (குறுக்கீடு)